தேவையின் அடிப்படையிலே நீட்டிப்பதில் தவறு இல்லை. ஆனால் மூன்றாண்டுக் காலம் தொடர்ந்து நீட்டிப்பது ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசியத் தேவைதான். எடுத்துக்கொண்ட பணி முடியவில்லை. ஆகவே நீட்டிப்பு என்று அமைச்சர் அவர்கள் காரணம் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ஜி.கே. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று ஆண்டுக் காலம். ஆண்டுக்காண்டு மாற்றுவதுதான் வழக்கம். அப்போது மூன்று ஆண்டுக் காலம் நீட்டிக்கத் தேவையில்லை. ஆண்டுக்கொரு முறை அதை மாற்றுகிறார்கள். வேகமாக அந்தப் பணிகளை முடித்திருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள் மணி. இது விவாதத்திற்குரியது அல்ல. (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) (குறுக்கீடு) மணி, உட்காருங்கள். (குறுக்கீடு) துரைமுருகன் கையைப் பிடித்து இழுக்கிறார். (குறுக்கீடு) உட்காருங்கள். பழனிசாமி எல்லாம் வெளியே போய்விட்டார். (குறுக்கீடுகள்) அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலையைக் கண்டித்து பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வெளிநடப்புச் செய்கிறோம்.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு நிதிநிலை நிர்வாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்த) சட்டமுன்வடிவு, 2005

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிர்வாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிர்வாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

2005 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கின்றேன்.*

(ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு)*

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே இந்தச் சட்டமுன்வடிவை காங்கிரஸ் கட்சியின் சார்பிலே எதிர்க்கிறேன்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எதிர்க்கிறோம்.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS